மலேயா சாம்பசிவம் தூக்குத் தண்டனை ரத்து

Phone No 4502 | Regd. No. M. 5458
விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (1—4—50) வெளியூர் (2—4—50) [இதழ் 211

பிரிட்டிஷ் போக்கில் பலத்த மாறுதல்

சுதந்திர மலேயா வர்த்தக சலுகை பெறவா?

சட்டத்தை மீறியே நீதிபதிகள் தீர்ப்பு அளித்துள்ளனர்!

லண்டன், மார்ச். 30—

மலேயா உயர்நீதி மன்றத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தொழிற் சங்கத் தமிழர் தோழர் சாம்பசிவத்தை விடுதலை செய்யும்படி பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது. தூக்கில் தொங்கிய கணபதிக்கு அடுத்த அதே தண்டனை விதிக்கப்பட்ட தோழர் சாம்பசிவம் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பளிப்பதற்கு முன் நீதி மன்றத்தைவிட்டு வெளியேறி ஒன்றரை மணி நேரம் நீதிபதிகள் கூடி ஆலோசித்தார்கள்.

மலேயா பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் துப்பாக்கிபோன்ற ஆயுதங்கள் எடுத்துச் செல்பவர்களுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்பதாகும். அப்படி இருக்க தோழர் சாம்பசிவத்துக்கு அளிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனையை எவ்வாறு நீதிபதிகள் ரத்து செய்தார்கள் என்பதற்குப் போதிய காரணம் கூற முடியவில்லை!

...ஒல் ஓர் ஆண்டு வரை, ...ன்றுவருமோ... [illegible]

[illegible] ...விரை ...ல் ஒரு அறிக்கை அரசாங்கத்தால் விடப்படும்.

வேலை தேடித் திரிந்த தோழர் சாம்பசிவம், 1948-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சில சீனர்களுக்கு இடையே ஏற்பட்ட சச்சரவில் பலமாகக் காயப்படுத்தப்பட்டார். அவர் ஒரு துப்பாக்கியை வைத்திருந்தாரென்று குற்றம் சாட்டப்பட்டு, ஐந்து மாதம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றபின் ஜொஹூர் உயர்நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். சாம்பசிவத்துக்காக வாதாடிய தோழர் ஸ்காட்கார்ன்ஸ் என்பவரும், ஏ. கெ. ஹாண்டு என்பவரும் விவாதித்ததாவது:—

“ஆயுதம் தாங்கிச் சென்றான் என்று குற்றம்சாட்டப்பட்டு நடத்தப்பட்ட வழக்கில் தோழர் சாம்பசிவம் முதலில் விடுதலை செய்யப்பட்டார். மீண்டும் விசாரிக்கப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். மலேயாவில் செய்துகொள்ளப்பட்ட அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டதால் உயர் நீதிமன்றத்துக்கு மனு செய்துகொள்ளப்பட்டது.”

தூக்குத்தண்டனை செல்லுபடியாகாதென்று கூறிவந்த தோழர்கள் கூறியதாவது:—

“இரண்டாவது தடவை வழக்குத் தொடர அரசாங்க வகீல் அனுமதிபெறப்படவில்லை. தோழர் சாம்பசிவம் படுகாயமுற்று இருக்கும்போது ஏதோ வாய் தவறிக் கூறியவற்றை ஆதாரமாகக் கொள்வது சரியாகாது.”

தங்களைத் தாக்கிய மூன்று கம்யூனிஸ்டுகளில் ஒருவர் தோழர் சாம்பசிவமென்றும், அவரிடம்தான் துப்பாக்கி இருந்ததென்றும் மலாய் ஆட்கள் சிலர் போலீசிடம் தெரிவித்தனர்.

பிறந்த தமிழகத்தில் பசிப்பிணி போக்கிக்கொள்ளாத நிலையில் அந்நிய நாடாகிய மலேயாவில் வேலைதேடச் சென்றவர் தோழர் சாம்பசிவம். அவர் அங்கு சென்ற நேரம் மலேயா மக்கள் சுதந்திரக் கிளர்ச்சி ... [illegible]

... [illegible] ...ல ... கிடருக்குத் தனிச் சலுகைகள் கொடுத்து தரித்தார்கள் என்றாலும், இந்தியர், குறிப்பாகத் தமிழர்கள் மலேயா மக்களின் நம்பிக்கை பெற்று வாழ்ந்தார்கள்.

இந்திய உபகண்டம் சுதந்திரம் பெற்றதால் மலேயா மக்களும் சுதந்திரக் கிளர்ச்சி ஆரம்பித்தார்கள். இந்தச்சுதந்திரப் போராட்டத்திலும் சில இந்திய நாடுகளிலிருந்து சென்று, மலேயாவைச்சொந்த

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

வெற்றிப்பாதையில் ஆலைத் தொழிலாளர்கள் முன்னேற்றம்

—(0)—

மதுரை மீனாட்சி மில் திறக்கப்பட்டது

—(0)—

முதலாளிகள் மீது ஆட்சியாளர் நடவடிக்கை

மதுரை, மார்ச். 29—

“ஆள் குறைப்பு திட்டத்... [illegible] ...ம் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இம்மாதம் 10ந் தேதி ஆள் குறைப்பு திட்டத்தை அமுல்நடத்தியும், வேலைப்பளுவை அதிகரித்தும் சுமார் 500 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதால், மில் தொழிலாளர்கள் உள்ளிருந்து வேலைநிறுத்தம் செய்துவந்தனர். பின்னர் 20ந் தேதி அன்று மில் நிர்வாகத்தினர் மில்லைப் பூட்டிவிட்டனர்.

கூலி நிர்ணய போர்டு அறிக்கைப்படியும், வேலை நிர்ணயப் போர்டு அறிக்கை அடிப்படையிலும் வேலை செய்ய தொழிலாளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க மீண்டும் 29ந் தேதி மில் திறக்கப்படும் என்றும் அறிவித்திருந்தனர்.

இதற்கிடையே சர்க்கார் மில் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வந்தனர். மில் தொழிலாளர்கள் அனைவரும் நகரில் பல தெருக்களில் மில் நிர்வாகத்தின் போக்கை கண்டித்துக்கொண்டும், அட்டைகளில் தங்கள் கோரிக்கைகளை வரைந்துகொண்டும் ஊர்வலமாக வந்தனர்.

மில் திறக்கப்பட்டது: ஆனால்...!

இந் நிலையில் இன்று அதிகாலையில் மில் திறக்கப்பட்டது. ஆனால் வேலைக்கு யாரும் போகவில்லை. மில் அருகே தொழிலாளர்கள் அத்தனை பேரும் அமர்ந்துவிட்டனர். பின்னர் இங்கு முதல் வகுப்பு நீதிபதி அருணாசலம், மதுரை ஜில்லாகலெக்டர் ராமவர்மாராஜா, டிபடிசூப்பிரண்டலைட் சேதுமாதவன், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கணபதி நாடார், சப் இன்ஸ்பெக்டர்கள் முருகன், முத்து ராமலிங்கம் ஆகியோர் மில்லுக்கு வந்து தொழிலாளர்களை அமைதியாக இருக்கச்செய்த, தொழிலாளர் தலைவர் ஜி. ராமானுஜம், மு. வேலு, எம். எஸ். இராமச்சந்திரன் ஆகியோர்கள் தொழிலாளர்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்க மில் நிர்வாகஸ்தருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தப் பேச்சு வார்த்தை பயனளிக்காது போகவே புது வேலைத் திட்டத்தால் அடிப்படையில் மில்லை நடத்தினால் நகரில் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று கருதி, இரண்டு மாத காலத்திற்கு மேலே ... உத்தரவை வெளியிட்டார். ... [illegible] ...டின் முடிவு அமுலிலிருக் ... [illegible] ...கத்தின்மீது சர்க்கார் ந[illegible]கை எடுத்துக் கொண்டது ... இன்னும் பல மில்களில் ... தவரும் ஊழல்களை விளக்கி, இந்த மில்கள் மீதும் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இன்று மாலை மெயின் கார்ட் பொட்டல் மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தோழர் மு. வேலு அறிவித்தார்:

இக் கூட்டத்திற்கு ஏராளமான மில் தொழிலாளர்களும், தாய்மார்களும் வந்திருந்தனர்.

மு. வேலு, மேலும் பேசுகையில் நடவடிக்கை எடுத்துக்கொண்ட சர்க்காரைப்பாராட்டுவதாகவும், தொழிலாளர்களுக்கு வெற்றி நிச்சயம் கிடைக்குமென்றும், ஆகவே தொழிலாளர்கள் அமைதியாக இருக்கும்படியும், இப்பொழுது மில்லில் உள்ள சகல கட்சிக்காரர்களும் ஒத்துழைத்தது போன்று வருங்காலத்திலும் இவ்விதம் ஒத்துழைத்து வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர் ஜி. ராமானுஜம், எம். எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் பேசினார்கள். (ச-ரி)

யூகோ யு. எஸ். உறவு

லண்டன், மார்ச். 31—

புது பெல்கிரேட் மந்திரி சபையில் யு. எஸ். வில் யூகோ ஸ்தானிகராக இருந்த கோஸனோவிக் ஒரு மந்திரியாக சேர்க்கப்பட்டதின் மூலம் யூகோ யுனைடெட்ஸ்டேட்ஸ் உறவு வளரப்போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோஸனோவிக் வாஷிங்டனில் 4 ஆண்டு காலம் தங்கிப் பழகி இருக்கிறார்.

கீழ்க்கோடி நாடுகள் பற்றி அமெரிக்கா கவலை!

—(0)—

கம்யூனிஸத்தைத் தடுக்க உதவுமாம்!

லண்டன், மார்ச். 31—

தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸம் தலைதூக்க முடியாதபடி செய்ய யுனைடெட்ஸ்டேட்ஸ் விசேஷ உதவி அளிக்க முன்வரும் என்பது, லண்டன் வாஷிங்டன் வட்டாரச் செய்திகளிலிருந்து ஊர்ஜிதமாகியிருக்கிறது.

கீழ்க்கோடியில் ஒரு ஐக்ய கொள்கையை வகுக்கத் தான் தயாராக இருப்பதாக யு எஸ். ராஜாங்க மந்திரி அகீஸன் கூறுவதாக சொல்லப்படுகிறது. கீழ்க்கோடி நாடுகளுக்கு அதிக உதவி அளிக்கப்படவேண்டும் என்பதை அகீஸனும், ஜெஸ்ஸப்பும் செனெட் அயல்நாட்டு உறவுக் கமிட்டியில் வற்புறுத்தியிருக்கின்றனர். கம்யூனிஸம் பரவுவதைக் கண்டு தான் மிகவும் கவலைப்படுவதாக, ஜெனரல் ஐஸன்ஹோவரும் கூறியிருக்கிறார்.

ஜெக்கில் ரகசிய இயக்கம்

லண்டன், மார்ச். 31—

ஜெக்கோஸ்லாவாகியாவில் கம்யூனிஸ்டுகளை எதிர்க்கும் ரகசிய இயக்கம் வலுவடைந்து வருவதாக இங்கு செய்திகள் கிடைத்திருக்கின்றன.

ரூஸ்வெல்டின் 50 லட்சம் கடிதங்கள்

நியூயார்க், மார்ச். 31—

ஹைட்பார்க்கில் ரூஸ்வெல்ட்டிற்குச் சொந்தமான அரண்மனை அவர் ஞாபகச்சின்ன கட்டிடமாக மாற்றப்பட்டிருக்கிறது.

இங்கு ரூஸ்வெல்ட் எழுதியதும் அவருக்கு எழுதப்பட்டதுமான 50 லட்சம் கடிதங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் 750,000 கடிதங்கள் மட்டும் பார்க்க முடியாதபடி பூட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் இப்பொழுது உயிருடன் இருந்து வருபவர்களைக் குறித்து அவை இருப்பதுதான் காரணமாகும்.

இதில் இரண்டு கடிதங்கள் யுத்த கால மாநாட்டின் போது அவர் எழுதியவையாம். அவைகளில் ஒன்று டெஹ்ரான் மாநாட்டின் போது சர்ச்சிலுக்கு எழுதியது மற்றொன்று கஸபிளங்கா மாநாட்டின் போது பிரிட்டிஷ் மன்னர் ஜார்ஜுக்கு எழுதியது.

இமயத்தின் உச்சியைக் கண்டுபிடிக்க...

மீண்டும் ஒரு முயற்சி

பாரிஸ், மார்ச். 31—

இமாலய மலை மீது ஏறுவதற்காகத் திட்டம் போட்டுள்ள ஒரு பிரெஞ்சுக் கோஷ்டி, இம்மாதக் கடைசியில் விமானமூலம் இந்தியா வருகின்றனர்.

மூன்று மாதகாலம் இக்கோஷ்டியினர் இமயமலைப் பிரதேசத்தில் தங்கியிருப்பர். இக்கோஷ்டியில் 8 பேர்களே இருப்பார்கள் என்றும், இவர்கள் எவ்வளவு குறைவான சாமான்களைக் கொண்டுசெல்ல முடியுமோ, அவ்வளவுக்கே கொண்டு செல்வர் என்றும் கூறப்படுகிறது.

நேபாளத்தின் வடஎல்லையிலுள்ள 8170 மீட்டர் உயரமுள்ள தவளகிரி மீது ஏறுவதே இக்கோஷ்டியினரின் முக்கிய நோக்கம். வெறும் பொழுது போக்குக்காக இக்கோஷ்டி செல்லவில்லை. ஆராய்ச்சி நடத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை பல கோஷ்டிகள் ஏறி உச்சியை அடைய முடியாமல் போய்விட்டது. இந்தக் கோஷ்டி வெற்றி பெற்றால் பிரான்ஸுக்கே உலகில் பெரும் புகழ் கிடைக்கும்.

மாலை மணி

சென்னை 1—4—50 சனிக்கிழமை

சுமை குறையவேண்டும்

வரிவிதிப்பு முறையின் அடிப்படை நோக்கங்கள் இரண்டு. ஒன்று அரசாங்க வருவாய்க்கு வழி தேடுவது, மற்றொன்று தனிப்பட்ட முதலாளிகளிடம் அளவுக்கு மீறி செல்வம் வளருவதைத் தடுத்து பொருளாதாரத் துறையில் நியாயமற்ற அளவு ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்ப்பது. இவ்விரு நோக்கங்களும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டன.

நாட்டு மக்களின் நலத்துக்கு ஆவன செய்ய வேண்டியது அரசியலார் கடன். இக்கடமையைச் செவ்வனே நிறைவேற்ற நாட்டின் தேவைக்கேற்ற வருவாயை அரசியலார் தேடியாக வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு நாட்டு வருவாய் பெருகுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஆட்சியாளர் ஆக்க வேலைகளில் ஈடுபட இயலும்.

ஆகவே வருவாய் பெருகுதற்கான வழிவகைகள் அனைத்தையும் ஆராய்ந்தறிதல் வேண்டும். அங்ஙனம் ஆராயுங்கால் வரிகள் மூலம் வருவாயைப் பெருக்குதல் அவசியம் எனத் தோன்றும். ஆனால், வருவாய் பெருக்கத்திற்கு வரி விதிப்பு மட்டுமே போதிய வழியாகாது. இன்றியமையாத தொழில்கள் பலவற்றை அரசாங்கமே மேற்கொண்டு நடத்துவதன் மூலமும் வருவாய்க்கு வழிகாணலாம். வரி விதிப்பு முறைகளைவிட, இங்ஙனம் தொழில்களைத் தேசீயமயமாக்குதல் மூலம் வருவாய் தேடுதலே சாலச் சிறந்த முறையாகும். வரி விதிப்பு ஒரு பழைய முறை; தொழில்களைத் தேசீயமயமாக்குதல் இன்றைய முறை. முன்னதைவிட பின்னதே பொருளாதார சமத்துவத்துக்கு வழிகோலவல்ல நல்ல முறை. ஆனால் இந்த நல்லமுறையைக் கையாள ஆட்சியாளர்—முதலாளித்வ அச்சு சற்று தயங்குவது இயற்கை. இதனாலேதான் வரி விதிப்பு முறை ஒன்றின் மூலமே வருவாய்தேட வழி பார்க்கின்றனர் ஆட்சியாளர். தேடட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அந்த வரி விதிப்புக் கொள்கையால் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுதல் கூடாது. அங்ஙனம் ஏழையரைத் துன்புறுத்தி வரி வசூல்ப்பது மக்களாட்சிக்கு ஏற்றதாகாது. கூடுமானவரையில் செல்வரிடமிருந்தே வரி வசூலிக்கப் படவேண்டும்.

ஆனால், இன்றைய ஆட்சி முறையில், இந்நிலைமை தலைகீழாய் அமைந்துள்ளது. ஏழையர் சுரண்டப்படுகின்றனர். செல்வர்கள் ஏற்றம் பெறுகின்றனர். ஏழையரை மேலும் மேலும் ஏழையராகவும் செல்வரை மேலும் செல்வராகவும் செய்யவுமே இன்றைய வரி விதிப்புகள் பயன்பட்டு வருகின்றன. இங்ஙனம் ஏழையரின் உதிரத்தை உறிஞ்சும் வரி விதிப்பு முறையைக் குறித்து யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. எப்படியோ அரசாங்க வருவாய் அதிகரித்தால் போதும் என்று கருதுகின்ற முறையிலே காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

இங்ஙனம் ஊரை அடித்து உலையிலே போடும் வரி விதிப்புக் கொள்கைக்குத்தான் பாராட்டு மிகுதியாக இருக்கிறது. இன்றையதினம் அதிக வரி வசூலைத் தேடித்தருவது விற்பனை வரி. இவ்வரி முறையை "காமதேனு" என்று வர்ணிக்கின்றனர் ஆட்சியாளர். கறக்கக் கறக்கச் சுரக்கிறதாம் வரி! ஆனால் இங்ஙனம் வரி சுரக்கும் 'காமதேனு' எது என்று ஆராய்கின்றபோது, நமது கண்ணெதிரில் காணக்கூடியது அந்த விண்ணுலக 'காமதேனு' அல்ல; இம்மண்ணுலக ஏழை எளியவரே.

விற்பனை வரியைக் 'காமதேனு' என்கின்றனர் ஆட்சியாளர். ஆனால் நடைமுறையில் அக் 'காமதேனு' பொருளாதாரத் து[...] ...ரைப் பீ[...] நோய்!

[...] விற்பனை[...] கிறது. அப்ப[...]க ஏழையர் இதனால் பாதிக்கப்படுகின்றனர் என இயம்புவது எப்படிப் பொருத்தமாகும் என்று கேட்கப்படலாம். உண்மையை ஆராய்ந்து பார்க்கின்றபோது இவ்வரி விற்பனை வரியாகவே இருப்பதில்லை. வாங்குவோரே இவ்வரியைச் செலுத்த வேண்டியவர்களாகின்றனர். அரசாங்கத்துக்கும் ஏழை எளியவர்கட்கும் இடையே இருந்து இவ்வரியை வசூலிக்கும் திருப்பணியைச் செய்து வருகின்றனர் வியாபாரிகள். இங்ஙனம் வாதத் தகரை வழ்வைத்து வறியவரை வாட்டச் செய்யும் ஆட்சியை எங்ஙனம் மக்கள் நல நாட்டு ஆட்சி என்று சொல்ல முடியும்? அரசியலாருக்குத் தெரியாதா, இந்தக் காமதேனு' எப்படிப் பணம் கறக்கிறது என்ற ரகசியம்? அப்படித் தெரிந்திருந்தும் ஏழையர் துயரைத் தணிக்க என்ன வழி வகை கண்டார்கள் இவர்கள்? இதனால் வரி வசூலிப்பது கூடாது என்று கூறுவதாக கொள்ளக்கூடாது. வரிதேவைதான்; ஆனால் வரி விதிப்புக் கொள்கையின் அடிப்படை நோக்கத்துக்கு மாறாக, ஏழையரை ஏங்க வைத்து, செல்வரைச் சிறப்புறச் செய்வதா?

எனவே விற்பனை வரி விஷயத்தில் ஆட்சியாளர் தமது திட்டத்தை மாற்றி அமைக்க முயலவேண்டும். இக் கருத்தினை உள்ளடக்கியே அண்மையில் சென்னை மேல் சபையில் பேசியபோது டாக்டர் லட்சுமணசாமி அவர்கள்,

'காமதேனு என்று நிதி அமைச்சரால் அழைக்கப்படும் விற்பனைவரி, ஏழைகளைத்தான் பெரிதும் பாதிக்கின்றது. இதை அரசியலார் நன்கு கவனிக்க வேண்டும். ஏழைகளை இவ்வரி பாதிப்பதை எவ்வளவு தூரம் குறைக்க முடியும் என்பது பற்றி ஆராயவேண்டும்.''

எனக் குறிப்பிட்டுள்ளார்!

எனவே, இன்று விற்பனை வரி மூலம் ஏழையர் மீது சுமத்தப்பட்டிருக்கும் வரிச்சுமை குறைக்கப்படவேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். வாழ்க்கைச் செலவு புள்ளிகள் அதிகரித்துள்ள இன்றைய நிலையில்—விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கும் வேளையில் இந்த வரிச்சுமையேனும் குறையாவிடில் ஏழையர் வாழ்வு மேலும் கவலைக்கிடமானதாகும். எனவே, முதலில் இச்சுமை குறைய வேண்டும், உடனே குறையவேண்டும், இதற்கு அரசியலார் ஆவன செய்வார்களாக.

குள்ளநரிகள் கும்மாளம்

லண்டன், மார்ச். 31—

ஆஸ்திரிய ஹங்கேரிய எல்லைப் பிரதேசத்தில் வெறிபிடித்த குள்ளநரிகள் அட்டகாசம் செய்து வருகின்றன வென்றும், இந்த வெறி நாய்களுக்கும் பரவியிருக்கிறதென்றும் இவைகளைச் சுட்டுத்தள்ளவும் விஷப்புகை மூலம் சாகடிக்கவும் முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றன வென்றும் கூறப்படுகிறது. இந்த நகரில் தெருவில் போவோர் வருவோரைத் தாக்கி அவர்கள் மீது பாய்கிறதாம். கோட்டார்சைபினில் (?) போவோர்களைகூட இந்த நரிகள் விடுவதில்லையாம். யாரும் வெளியே வரவே பயப்படுகின்றனர்.

போஸ்ட்மாஸ்டருக்கு பரிசு!

கொழும்பு, மார்ச். 31—

சமீபத்தில் இங்கிலாந்தில் அயின்ட்ரீ என்ற இடத்தில் நடத்தப்பட்ட குதிரைப் பந்தயத்தில் இலங்கையைச் சேர்ந்த ஒரு மாஜி போஸ்ட்மாஸ்டர் கருண திலகா (?) பந்தயத்தில் இவர் பணம் கட்டிய குதிரை முதலில் வந்ததால், ரூ. 18500 பரிசு கிடைத்தது. அவர் இன்னும் தன் உழைப்பை விடவில்லை அவர் சர்க்கார் காரியாலயம் ஒன்றில் தற்காலிக குமாஸ்தாவாக வேலைசெய்கிறாராம்.

வர்ண டெலிவிஷன் ஹாலந்தில் நடத்திக்காட்டப்படும்

லண்டன், மார்ச். 30—

ஹாலந்தில் ஹெல்வர்ஷன் என்ற இடத்தில் வர்ண டெலிவிஷனை நடத்திக்காட்ட பிரிட்டிஷ் கம்பெனியொன்று முன் வந்திருக்கிறது.

ஒலிபரப்பு அதிகாரிகள் யூனிவர்ஸிடி பேராசிரியர்கள் பார்லிமெண்ட் மெம்பர்கள் ஆகிய [...]வி [...]

கூட்டத்துக்குப் பலி

லண்டன், மார்ச். 31—

பிரிஸ்டல் பாங்கியில் நடைபெற்ற கொள்ளையில் திருடர்களைத் துரத்தும்போது அவர்களால் சுடப்பட்டு மாண்ட ராபர்ட்டெய்லர் என்பவரின் பெற்றோர்களுக்குத் தங்கள் விஸ்வாசத்தின் அறிகுறியாக பாங்கி டைரக்டர்கள் ரூ. 13,300 அனுப்பியிருக்கின்றனர்.

நைரோபி, மார்ச். 31—

கிளஸ்டர் கோமகன் தன் மனைவியுடன் இங்கு விஜயம் செய்தபோது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. கிழக்கு ஆப்பிரிக்க தொழிற்சங்க காங்கிரஸ் பயமுறுத்தியபடி பகிஷ்காரம் எதுவும் நடைபெறவில்லையாம்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

2 - 4 - 50

மதுரை:—மு. கருணாநிதி, எஸ். முத்து, எம். அய்யாச்சாமி.

வடக்கூர் (தூத்துக்குடி):—கி. மனோகரன், ஏ. வி பி. ஆனந்தம், இரா. சு. தங்கப்பழம், எம். இரத்தினம்.

விக்ரமசிங்கபுரம்:—எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், சு. கந்தசாமி.

திருச்சி:—சி. பி. சிற்றரசு, ஏ. பி. தர்மலிங்கம்.

சத்தியமங்கலம்:—எஸ். அப்பாவு, கண்ணப்பன், கே. சிவக்கொழுந்து.

3 - 4 - 50

லால்குடி:—சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன், ஜி. பராங்குசம், ஏ. பி. தர்மலிங்கம்.

மலேயா...

—: 1-ம் பக்கத் தொடர்ச்சி :—

...சாட்டாக்கிக்கொண்டுள்ள மக்கள் ஈடுபட்டார்கள், போராட்டம் நடத்தியவர்கள் சாத்வீக முறையில் நம்பிக்கை கொள்ளவில்லை. துப்பாக்கி தான் வெள்ளையனை வெளியேற்றுமென்று அவர்கள் திடமாக நம்பினார்கள். ஆனால் வெள்ளையன் மலேயாவை விடுவதாக இல்லை. இதற்கு முக்கிய காரணம் 'பரந்த சாம்ராஜ்யத்தை' இழந்துவிட்டதுதான்.

நிலைமை மாறிவிட்டது. மக்கள் பலம் தளர்ந்துவிட்டனர். கணபதி, சாம்பசிவம் போன்ற தோழர்கள் அநியாயமாக[...]

[...]செய்யப்பட்டுவிட்டதுதான்.

தோழர் சாம்பசிவம் விடுதலை செய்யப்படுவதற்கு சட்டத்தில் சிறிதுகூட ஆதரவு இல்லை. உண்மையில் பிரிவு கவுன்சில், சாம்பசிவத்தின் தூக்குத் தண்டனையை ஊர்ஜிதப்படுத்தி இருக்கவேண்டும். ஆனால், விடுதலை செய்தது! காரணம் பலருக்கு விளங்கவில்லை. பிரிவு கவுன்சில் நடந்துகொண்ட முறையே புதிதாகத் தலை [illegible] இருந்ததென்று அறிவிக்கப்படுகிறது.

நாம் ஒன்று கூறுகிறோம், இது சட்டத்தை ஒட்டி அளிக்கப்பட்ட தீர்ப்பல்ல. அரசியலாரும் சேர்ந்து செய்த முடிவு.

நேற்று அட்லீ கூறிவிட்டார் மலேயாவுக்குச் சுதந்திரம் கொடுத்து விடுகிறோமென்று. ஏற்கனவே, கணபதியைத் தூக்கிலிட்டு தமிழரின் வெறுப்புக்கும் மலேயாவின் வெறுப்புக்கும் பிரிட்டன் ஆளாகியிருக்கிறது. அப்படி இருக்க சாம்பசிவத்தின் பழியையும் ஏன் சுமந்துகொள்ள வேண்டும்? இதனால் சுதந்திரம் பெறும் மலேயா வியாபாரத் தொடர்பு வைத்துக்கொள்ள மாட்டேன் என்று கூறினால் என்ன செய்வது. ரப்பருக்கும், டின்னுக்கும் பிரிட்டன் என்ன செய்யும்? இதுதான் தோழர் சாம்பசிவம் விடுதலையானதின் மர்மம் என்று நாம் ஏன் எண்ணக்கூடாது?

பாரதியார் நூல்களுக்கு பாதுகாப்பு

மகாகவி பாரதியாரின் காவியங்களைக் கொண்ட அவருடைய கையெழுத்துப் பிரதிகள் கரைப்போய் விடாமலும் பூச்சி அரித்து விடாமலும் பாதுகாக்க அவைகளை 'சிப்பான்' முறையில் பைண்ட் செய்து அதிகாரிகள் பூஜித்து வைத்திருக்கின்றனர்.

பாரதியாரின் கையெழுத்துப் பிரதிகள் [illegible] ஒட்டப்பட்டு அதன் மீது [illegible] 'சிப்பான்' என்ற மெல்லிய துணி ஒட்டப்பட்டு பைண்ட் செய்யப்பட்டுள்ளது. இந்த துணி ஒட்டப்பட்டது[...] என்பது [...]

[...] அதிகாலம் என்[...] நூற்றாண்டு பொக்கிஷம் [...] வாமல் காப்பாற்றமுடியும் என[...] மியூஸியம் [illegible] டாக்டர் ஐயப்பன் கூறினார்.

[illegible] பாரதியார் ஒரே [illegible] கையெழுத்துப் பிரதிகளை [illegible] செய்து [illegible].

இக் கையெழுத்துப் பிரதிகள் பாரதியார் சகோதரரிடமிருந்து சர்க்காரால் பணம் கொடுத்து வாங்கப்பட்டவை. இவைகளில் 'பாஞ்சாலி சபதம்' 'பகவத்கீதை' 'ஜப்பானிய கவிதை' [illegible] 'கண்ணன் பாட்டு' 'குயில் பாட்டு' [illegible] பாரதியார் [illegible] எழுதியுள்ளனர்.

ஐரோப்பிய கௌன்ஸிலில் மேற்கு ஜெர்மனி

[illegible], மார்ச். 31—

ஐரோப்பிய கௌன்ஸிலில் மெம்பர்களாக உள்ள நாடுகளின் 13 [illegible] மந்திரிகள் இன்று கூடி மேற்கு ஜெர்மனி, ஸார் [illegible] கௌன்ஸிலில் சேரும்படி அழைப்பதென முடிவு செய்திருக்கின்றனர். மேற்கு ஜெர்மனி முன்பு சில நிபந்தனைகளை விதித்திருக்கிறது. இந்த அழைப்பில் அந்த நிபந்தனைகள் குறித்து எதுவும் இல்லாததால், மேற்கு ஜெர்மனி தான் இதில் சேர வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்யவேண்டும்.

அறிவு வளர்ச்சிக்கு ரூ. 15000 இல்லை!

கல் தூணுக்கு ரூ. 50000 அவசியமா?

நகர மன்றத்தில் அங்கத்தினர்கள் கண்டனம்

சென்னை, மார்ச். 31—

நேற்றுமாலை சென்னை நகராண்மைக்கழகக்கூட்டம், மேயர் செரியன் தலைமையில் கூடிற்று வரவு செலவு திட்டத்தைப்பற்றி முடிவான விவாதம் காரசாரமாக நடந்தது.

'காந்தி ஸ்தூபி' நிதிக்கு ரூ. 50000 கொடுக்கவேண்டுமென்று தோழர் எம். ராதாகிருஷ்ணபிள்ளை ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

தீர்மானத்தை எதிர்த்துத் தோழர் முனுசாமி பேசுகையில் ரூ 5000த்தை நகராண்மைக்கழகம் மட்டுமே கொடுப்பது காந்தியார் கொள்கைக்கே விரோதமானதென்றும், நேற்றைய விவாதத்தின்போது நகராண்மைக் கழக அங்கத்தினர் கட்டிட நிதிக்கு ரூ. 5000 கொடுப்பதே ஏழை மக்களின் வரிப் பணத்தை வீணாக்குவதென்ற தேசியக் கட்சி உறுப்பினர்கள் கண்டித்தார்களென்றும் ஆனால் அதே அங்கத்தினர்கள் 'ஸ்தூபிநிதி'க்கு ரூ. 50000 கொடுக்கவேண்டுமென்று வாதாடுவது சிரிப்புக்கிடமாக இருக்கிறதென்று கூறினார்.

அறிவு வளர்ச்சிக்காக ரூ. 15000 கொடுக்க மறுத்து, ஒரு பயனுக்கும் உதவாத கல்தூணுக்கு ரூ. 50000 கொடுப்பது எவ்வாறு பொருந்து[ம் என்]று கூறினார்.

[ம]க்களின் பணத்தை இவ்[வாறு வீண]ாக்குவதை...

...விரோதமானதென்று கூறி, தீர்மானத்தை எதிர்த்தார்.

தோழர் நம்மாள்வார் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகையில், லட்சக்கணக்கான பணத்தைச் செலவிட்டு ஒரு பயனுக்குமுதவாத கல்தூண் நாட்டுவதைவிட ஏழைகள் தங்குவதற்கு ஒரு கட்டிடமோ அல்லது மருத்துவ விடுதியோ கட்டினால் மக்களுக்குப் பயன் உள்ளதாக இருக்குமென்று கூறினார்.

தோழர் கெ. ராமலிங்கம் அவர்களும் இத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார்.

தோழர் செங்கல்வராயன் பேசுகையில், ஏற்கனவே ரூ. 50000 கொடுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை நகராண்மைக் கழகம் நிறைவேற்றியுள்ளதென்றும், அதை இப்பொழுது பேச்சளவில் நிறைவேற்றப்பட வேண்டுவதுதானென்றும் கூறினார்.

வரவு-செலவுத் திட்டத்தின் பல உட்பிரிவுகளுக்குத் தோழர் என். ஜீவரத்தினம் பல திருத்தங்கள் கொண்டுவந்து, திருத்தம் செய்யப்படவேண்டியதின் அவசியத்தை விளக்கிப் பேசியபின், அவர் திருத்தங்களுடன் பல பிரிவுகள் நிறைவேற்றப்பட்டன.

வர்த்தக முட்டுக்கட்டை தீருமா?

லண்டன், மார்ச். 31—

இந்தியாவுக்கு 800,000 டன் கச்சா சணலைப் பாகிஸ்தான் சப்ளை செய்யும் என்ற விஷயம் இங்குள்ள பாகிஸ்தான் உத்யோக வட்டாரங்களில் ஊர்ஜிதம் செய்யப்படாவிட்டாலும், லண்டன் வர்த்தக வட்டாரங்களில் இச் செய்தி மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படுகிறது. இதன் மூலம் இந்திய—பாகிஸ்தான் வர்த்தக முட்டுக்கட்டை தீரலாம் என்று இங்கு நம்பப்படுகிறது.

சணல் தொழில் கம்பெனிகளின் பிரதிநிதி ஒருவர் இச்செய்தியில் உண்மை இருக்கிறதே என்று கூறுகிறார்.

இந்தியா—பாகிஸ்தானின் இந்த ஏற்பாடு ஊர்ஜிதம் செய்யப்பட்டால் ஐரோப்பாவுக்குக் கிடைக்கும் சணல் அளவு குறைந்துவிடும் என்று வர்த்தக வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

சீன மாகாணத்தில் எண்ணெய் தேடுகிறது ரஷியா

லண்டன், மார்ச். 30—

காஷ்மீரை ஒட்டியுள்ள சீன...

...வருகிறது. இது உத்தியோகபூர்வ அறிவிப்பாகக் கூறப்படுகிறது.

யுத்தக் கைதியாக நடத்தப்பட்ட நாய்

லண்டன், மார்ச். 31—

உலகிலேயே யுத்தக் கைதியாக பதிவு செய்து நடத்தப்பட்ட ஒரே நாய் ஜூடி இறந்துவிட்டது என்று அறிவிக்கப்படுகிறது.

ஹாங்காங்கில் பிறந்த இந்த நாய் அரிய சேவை செய்து, பலருடைய உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறதாம். பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் பராஸ் ஹோப்பிலுள்ள கோஷ்டியினருடன் இந்த நாய் இருந்து வந்தது. ஜப்பானியர் இவர்களை யுத்தக் கைதிகளாக பிடித்தபோது, இந்த நாயையும் ஒரு யுத்தக் கைதியாகவே மதித்து நடத்தினர். விடுதலை பெற்றபின், இந்த நாய்க்கு பல விருதுகளும் மெடல்களும் அளித்துக் கௌரவிக்கப்பட்டதாம்.

போட்டியின் பெயரால் மோசடி

மதுரை, மார்ச். 27—

இந்நகர் தெற்குவாசல் சின்னக்கடை தெருவில் "ஜெயா நிலையம்" என்ற பெயரால் ஒரு குறுக்கெழுத்துப் போட்டி நடத்திப் பொதுமக்களிடம் பணம் மோசடி செய்துவிட்டதாக நாகசாமி என்பவர்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வழக்கை விசாரணை செய்த நகர் முதல் வகுப்பு நீதிபதி அருந்தால் எதிரியை ரூ 200 ல் சொந்த ஜாமீனில் விடுதலை செய்தார். (ந நி)

தடை நீக்கப்பட்டது

மதுரை, மார்ச், 29—

இந்நகர் நிலக்கோட்டை ரோட்டில் இருந்து வரும் தண்ணீர்...

...நீக்கப்பட்டுவிட்டது என்று நகர் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அறிவித்துள்ளார்கள்.

இனி நடப்பவை

சேலம்:—(செவ்வாய் பேட்டை) 2-3-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு, சேலம் விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் மேட்டுக் குடிச்சி தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எ. சித்தையன் ஆகியோர் அழகிரி நினைவு நாள் குறித்துப் பேசுவர்.

* * *

அக்கிப்பேட்டை, பெங்களூர்—இவ்வூர் தி. மு. க. சார்பாக அழகிரி நினைவுநாள், தோழர் மு. இராமானுசம் அவர்கள் தலைமையில் 2-4-50 ஞாயிறு காலை 9-30 க்கு (என். எஸ். கே. சங்க ஹால்) பலேபேட்டையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் அ. ஈ. ஈசுவரன், மு. சி. வேணு, வே. இளஞ்சேரன், தி. ரா. தாமராசன், வே. அ. தாமோதரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* *

சேத்துப்பட்டு:—(சென்னை) 2-4-50 ஞாயிறுமாலை 5 மணிக்கு இவ்வூர் மங்களபுரம் 3 வது வீதி 103-4 எண் இல்லத்தில் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கிய பொருள்குறித்து ஆலோசிக்கப்படும்.

* * *

சென்னை, மவுண்ட்ரோடு:—இவ்வூர் தி. மு. கழக சார்பில் 2-4-50 ஞாயிறு காலை 9-மணிக்கு கழக உறுப்பினர்களடங்கிய கூட்டத்தில் காவியன் அழகிரிசாமியின் நினைவுநாள் கொண்டாடப்படும். கூட்டத்திற்கு தோழர் கூத்தரசன் அவர்கள் தலைமைதாங்குவார். பன்மொழிப் புலவர் கே. அப்பாதுரை (பிள்ளை) அவர்கள் அழகிரிசாமி [படத்தை] திறந்து... [தோழ]ர்கள் சி. அரங்க... ஆகியோர் ...வார்.

*

பெரம்பூர்:... சென்னை 20 வது வட்டம் இவ்வூர் தி. மு. கழக சார்பில் 2-4-50 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு அழகிரி நினைவுநாள் கொண்டாடப்படும். தோழர் மதிவாணன் தலைமை வகிப்பார். இரா. இளமதி அழகிரி படத்தைத் திறந்து வைப்பார். எம். பி. கபிலன், எஸ். வி. எல். ராவ், எழில்மதியன் மற்றும்பலர் பேசுவர்.

* * *

மதுரை:— 2-4-50 ஞாயிறு மாலை 6 30 மணிக்கு வைகையாற்றில் பெரியபாலத்திற்குக் கீழ்புறத்தில் அழகிரி நினைவுநாள் நடைபெறும். அதுபோது தோழர்கள் மு. கருணாநிதி, எஸ். முத்து, எம். அய்யாசாமி ஆகியோர் பேசுவர்.

* * *

சென்னை:—இந்திய மக்கள் கழகத்தின் சார்பாக ஞாயிற்றுக்கிழமை 2-4-50 அன்று காலை 9 மணிக்கு சிந்தாதிரிப்பேட்டை வெங்கடேச கிராமணி தெரு 28-ம் எண்ணுள்ள கழக கட்டிடத்தில் 'மதம் அவசியமா?' என்பது பற்றி ஓர் சொற்பயிற்சி நடைபெறும்.

* * *

சென்னை, குளை:—இவ்வூர் மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், தோழர் க. நமசிவேலன் பி. ஓ. எல். ஆனர்ஸ் அவர்கள் திருக்குறளில் 'புலால் மறுத்தல்' என்னும் பொருள் பற்றிச் சூளை வாத்தியார் கந்தப் பிள்ளைத் தெரு, நகராண்மைக் கழகப் பள்ளியில் 2-4-50 ஞாயிறு காலை 10-மணிக்குப் பேசுவார்கள்.

* * *

சென்னை, சேப்பாக்கம்:—இவ்வூர் டாக்டர் சி. நடேசன் மன்றத்தின் சார்பாக 2—4—50 காலை 9-30 மணிக்கு அறிஞர் தோழர் கா. அப்பாதுரை அவர்களால் திருக்குறள்வகுப்பு நடத்தப்பெறும். இடம்: நகராண்மைக் கழக ஆண் பாடசாலை, பெல்ஸ் ரோட் சேப்பாக்கம்.

* * *

பெங்களூர்:—இவ்வூர் வள்ளுவர் வாலிபர் கழகத்தின் சார்பில், 2-4-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு ஷை. ராமபுரம் ஹரிஜன சேவா சங்க விடுதியில் குறள் வகுப்பு துவக்க விழா நடைபெறும். தோழர் ஜி. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் தி. ரா. தாமராசன் அவர்கள் "குறள் வகுப்பு துவக்கவிழா" சொற்பொழிவாற்றுவார். தோழர் பூ. பார்த்தசாரதி அவர்கள் பழமையும், புதுமையும் எனும் பொருள்பற்றியும், தோழர் மா. இளஞ்சேரன் 'இளைஞர்களுக்கு' எனும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

இங்கிலாந்து சென்ற இந்திய பத்திரிகாசிரியர்கள்

நாடு திரும்புகின்றனர்

லண்டன், மார்ச். 31—

பிரிட்டனில் சுற்றுப் பிரயாணம் செய்து பிரிட்டிஷ் விவகாரங்களை நேரில் தெரிந்துகொள்ள சென்றிருந்த இந்திய பத்திரிகாசிரியர்கள் நேற்றிரவு லண்டன் விமான நிலையத்தில் விடைபெற்றுக்கொண்டனர்.

சாதாரண பிரிட்டிஷாரின் வாழ்க்கை முறை தன்னை மிகவும் கவர்ந்துவிட்டதாகவும், தொழிற்சாலையில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே உறவு நீடித்திருப்பதை தான் கண்டதாகவும், 'லோகமானியா'வின் ஆசிரியரான தோழர் பி. வி கட்கில் ருளோக் நிருபரிடம் கூறினர்.

காஸாவின் கருத்து

சென்னை 'சுதந்திர' வாரப் பத்திரிகையின் ஆசிரியர் தோழர் கா. ஸா சுப்பாராவ் கூறியதாவது:- கியூஸ்லேஜிய ஆக்ஸ்போர்ட் பிரிட்டனை எதிர்த்துப் போராடிய ஜெர்மன் மாணவர்களுக்கான ஞாபகச் சின்னம் ஏற்படுத்தியிருப்பதைக் கண்டேன். எவ்வளவு தாராள சகிப்புத் தன்மை பிரிட்டனில் இருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

இத்தகைய சகிப்புத் தன்மையைப்போது மக்களிடையே என்றும் இருப்பதைக் கண்டு நான் வியப்புறுகிறேன்.

21,000 மைல் சுற்றுப்பிரயாணம்

நியூயார்க், மார்ச். 31—

யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்வதேச ஸ்தானிகர் டாக்டர் பிலிப்ஜெஸப் 14 நாடுகளில் 21,000 மைல் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். இவர் சென்றிருந்த இடங்களில் நடந்த நிகழ்ச்சிகள் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

இவர் தன் மனைவியுடனும் ஒரு காரியதரிசியுடனும் தான் பிரயாணம் செய்திருக்கிறார். ஜனவரி 5-ந் தேதி இவர் டோக்கியோவிற்கு வந்தபோது பனிப்புயல் அடித்ததாம். மார்ச்சில் இந்தியா வந்தபோது கடும் வெப்பத்தினால் இவர் மிகவும் துன்பப்பட்டாராம்.

பெல்ஜிய மன்னர் பதவிக்குத் திரும்பும் பிரச்னை

பிரஸ்ஸல்ஸ், மார்ச். 31—

பெல்ஜியத்தின் பிரதமராகவிருக்கும் ஆல்பர்ட் டீவிஸ் மன்னர் பதவிக்குத் திரும்பும் பிரச்னை தகராறைத் தீர்த்துவைக்க, கடைசி முயற்சியாக மன்னரைக் காண அனுமதி கேட்டிருக்கிறார். மன்னர் முதலில் நாடு திரும்பி பின்னர் பட்டத்து இளவரசருக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்ற யோசனையை இவர் லியோபால்டிடம் தெரிவிப்பார் என்று தெரிகிறது.

வெளுக்காவிட்டாலும் வரி தரவேண்டுமா?

சலவைத் தொழிலாளிமீதிருந்த வழக்கு ரத்து

அரசியலாருக்கு நீதிபதிகள் கண்டனம்

"அழுக்குத் துணிகளையும், வெளுக்கப்பட்ட துணிகளையும் ஒரு சலவைத் தொழிலாளி வீட்டில் வைத்துக்கொண்டிருந்தால் அதற்காக அத்தொழிலாளியுள்ள நகரசபைக்கு வரி அளிக்கப்படவேண்டியதில்லை; அந்நகரசபை எல்லைக்குள் துணி வெளுத்தால்தான் வரி செலுத்தப்படவேண்டும்" என்று நீதிபதி சந்திரரெட்டி நேற்று தீர்ப்பளித்தார்

சென்னை, மார்ச். 31—

அனகாபுத்தூரைச் சேர்ந்த தோழர் சின்ன சிதம்பரம் என்பவர்மீது அரசாங்கம் அனகாபுத்தூர் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன்பு வழக்குத் தொடர்ந்தது. அந்நீதிமன்றத்தில் அரசாங்கத்துக்கு விரோதமாகத் தீர்ப்பளித்து தோழர் சிதம்பரம் விடுதலை செய்யப்பட்டார். இத்தீர்ப்பை எதிர்த்து அரசாங்கம் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்துகொண்டது.

வெளுப்பதற்காக அழுக்குத் துணிகளை வீட்டில் வைத்துக் கொண்டிருக்கவும், வெளுத்தத் துணிகளை வைத்துக்கொண்டிருக்கவும் ஒரு சலவைத் தொழிலாளி அரசாங்கத்திடமிருந்து லைசென்ஸ் பெறவேண்டுமென்றும் அப்படி தோழர் சிதம்பரம் பெறாதது குற்றமாகுமென்பதுதான் அரசாங்கத்தின் வழக்காகும்.

வெளுக்கும் பொருட்டு அழுக்குத் துணிகள் வைத்திருக்க நாமக்கல்லில் லைசென்ஸ் பெறவேண்டுமே தவிர நகரசபை எல்லைக்கு வெளியில் வெளுப்பதாக இருந்தால், லைசென்ஸ் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றும் பிரிவு ... திலிருந்து வாதிக்கப்பட்டது.

சட்டத்தின்படி சலவைத் தொழிலுக்கு வேண்டியவற்றை வைத்துக்கொண்டு செய்தால்தான் இச்சட்டம் செல்லுபடியாகுமென்றும், இல்லாவிட்டால் வீடுகளில் அழுக்குத் துணி வைத்திருக்கும் தனிப்பட்டோரைக்கூட இச்சட்டம் பாதிக்குமென்றும் பிரதிவாதி வக்கீல் கூறினார்.

அரசாங்கத்தின் வழக்குபலப்பொருத்தமாக இல்லையென்று நீதிபதி வழக்கைத் தள்ளிவிட்டார்.

பொறுமைக்குப் பலி

நியூயார்க், மார்ச். 31—

இரட்டையாகப் பிறந்த தன் சகோதரியைக் கொலை செய்ததாக அலைஸ்சார்ட் என்ற 14 வயது பெண் மீது கொலை குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

தன்னை விட தன் சகோதரி பிறரால் விரும்பப்படுவதைக் கண்டு பொறாமையே அவளைத் தான் கொலைசெய்யத் தூண்டியதாக அவள் கோர்ட்டில் கூறினாள்.

நாட்டு நடப்பு

திருவள்ளுவர் கழகம்

மதுரை, மார்ச். 18—

26—3—50 ஞாயிறு பிற்பகல் 7-மணிக்கு டி கழகச் செயலாளர் தோழர் வெ. கைலாசம் தலைமையில் "பண்புடைய கல்வி" என்னும் பொருள்பற்றி தோழர் சொ. கல்யாணசுந்தரமும் "உட்கோட்டம்" என்னும் பொருள்பற்றி தோழர் செல்விராசமும், "அறமும் மறமும்" பற்றி தோழர் சாம்பசிவமும், "திருக்குறள்" என்னும் பொருள்பற்றி தோழர் முத்துக்குமாரசாமியும், "நலக்குரியார் யார்?", என்னும் பொருள்பற்றி தோழர் ஆ. சண்முகவேல் அவர்களும் சொற்பொழிவாற்றினர்கள் பின் தோழர் சவுந்தரமுத்து நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

சி. க. பஞ்சாயத்துப் போர்டு

சிவகங்கை, மார்ச். 23—

இவ்வூர் நகர மக்கள் சார்பில் தோழர் நாகுமணன் சேர்வை அவர்கள் தலைமையில், அரண்மனை வாயல் முன்புறமாக 21—3—50 தேதி இரவு 7-30 மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அகால மரணமடைந்த சிவகெங்கைபஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்ட் அவர்களின் 20 வருட நகர சேவைபற்றியும், அன்னாரின் மரணத்தால் ஏற்பட்ட நஷ்டம் குறித்தும் வருத்தம் தெரிவித்து, பலர் பேசியபின் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிதே கலைந்தது.

ஆவடி எம். ஈ. எஸ். சிவிலியன் தொழிலாளர் சங்கம்

ஆவடி, மார்ச். 20—

15-3-50 அன்று ஏற்கனவே "டிரேட்டெஸ்டை" பகிஷ்கரித்ததின் விளைவாக அதிகாரிகள் இரண்டாம் முறையாக, தொழிலாளர்களைத் தனித்தனியாக அழைத்துக் கேட்டும், தொழிலாளர்கள் உட்காரமறுத்துவிட்டனர். 'டிரேட் டெஸ்டை' பகிஷ்கரித்ததின் காரணம் முன்னமே 1948-ம் ஆண்டு ஒரு டெஸ்ட் நடந்தது, அதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர், ஆகவே, தொழிலாளர்களை நீக்கவும், சம்பள உயர்வு கொடுக்கவும் முன் நடந்த டெஸ்டின் முடிவைக் கொண்டே நடந்தும்படியும், அதிகாரிகள், தங்கள் இஷ்டப்படி அடிக்கடி இம்மாதிரித் தொழிலாளிகளை நீக்குவதற்கு ஆயுதமாக "டிரேட் டெஸ்டை" உபயோகிப்பதனால், தொழிலாளர்கள் சங்கம் இனி இதற்கெல்லாம், இடங்கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்க்கலை முன்னேற்றக் கழகம்

சென்னை, மார்ச். 28—

24—3—50 வெள்ளி மாலை 4 மணிக்கு தமிழ்க் கலை முன்னற்றக் கழகக் கட்டிடத்தில், அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் "மக்கள் மணி" ஆசிரியர் தி. ஜெ. ஜெகந்நாதனை செயலாளராகவும், இளங்கோவன், (பிரசண்ட விகடன் துணையாசிரியர்) அவர்களைப் பொருளாளராகவும் சேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் கீழ்க்கண்ட தோழர்களைக்கொண்ட பிரசாரக் குழுவையும், கூட்டத்தில் நியமிக்கப்பட்டது.

பிரசாரக்குழுவினர்:— இளங்கோவன் (பி. வி. ஆசிரியர்), எ. என். வேணி (சிறுகதை ஆசிரியர்), இரா. சம்பந்தம், டா. கலைச்செழியன், டி. கே. சின்னதுரை (கோலார்-தங்கவயல்), சேலம் பழனிச்சாமி (சென்னை), எ. பிருத்திவிராஜ், இ. ரா. முத்தமிருட்டினன்.

மறுமலர்ச்சிக் கழகம்

மதுரை, மார்ச். 23—

இவ்வூர் வடக்கு மாசிவீதி மறுமலர்ச்சிக் கழகத்தின் புது வருட செயற்குழுக் கூட்டம் 19—3—50 கூடி கீழ்க்கண்ட செயற்குழுவை அமைத்தது.

தலைவர் தோழர் பழனியப்பன், செயலாளர்-அ. பிச்சை, உதவிச் செயலாளர்-மணிமொழியார், பொருள் உறுப்பினர்-ரெங்கராஜன். ஏனைய செயற்குழு உறுப்பினர்களாக 9 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தே. வே. வாலிபர் சங்கம்.

கோவை, மார்ச். 23—

இவ்வூர் ராமனாதபுரம் தேவேந்திர வேளாளர் வாலிபர் சங்கத்தின் பொதுக்கூட்டம் 22—3—50 தேதி "கோவை முரசு" ஆசிரியர் தோழர் எஸ். பி. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முகவுரையாக பொதும் பணியைச் செய்ய வேண்டியவை பற்றி இனியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அடுத்த தோழர்கள் ஆர். எம். சுப்பையன் எ. ஆறுமுகம் வி. பேச்சிமுத்து, வெள்ளியங்கிரி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். தலைவர் முடிவுரைக்குப் பின், செயலாளர் தோழர் பேச்சிமுத்து நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

திருவள்ளுவர் சோ. ப கழகம்

வேலூர், மார்ச். 22—

இவ்வூர்:—திருவள்ளுவர் சொந்தப்பயிற்சிக் கழகக் கூட்டம் 19-3-50 ஞாயிறு காலை நகர் தி. [illegible] கழகக் கட்டிடத்[illegible] மூ. அன்னல்[illegible] தலைமையில் [illegible] தலைவ[illegible] வரம் மற்றியும்[illegible] பேசும் திறனைப் [illegible] கூறினர்.

தோழர் இளஞ்செழியன், இன்றைய தமிழர் எய்தியுள்ள இழிநிலையை எடுத்துக் கூறினர்.

தோழர் சாமி, இன்றைய அரசியலாரின் போக்கைக் கண்டித்துப் பேசினர்.

தோழர் பாண்டியன் பெண்களைப்பற்றி தெளிவாகப் பேசினர்.

தோழர் வேலவில்லவன், கடவுளும், மதங்களும் என்பதை விரிவாக விளக்கினர்.

தோழர் குப்புசாமி "தமிழும் வடமொழியும்" என்பதைப் பற்றி அழகாகச் சொற்பொழிவாற்றினர்.

தோழர் கோவேந்தன், கடவுள்கள் ஆபாசத்தை எடுத்துரைத்தார்.

தோழர் கண்ணன் வேலூரிலுள்ள தொழிலாளர் நிலைமையை எடுத்துக் காட்டினர்.

தலைவர், பின்னுரை கூற செயலாளர் நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிந்தது.

தி. இ மறுமலர்ச்சி மன்றம்

கீழ்ப்பந்து, மார்ச். 31—

டி மன்ற திறப்புவிழா கூட்டம் 27-2 50 ல் மாலை 5 30 மணி அளவில் தோழர் பி. அப்பன்பெருமான் அவர்களின் தலைமையில், கீழ்காணும் தோழர்களை கழக முக்கிய உறுப்பினர்களாகத்தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர். அ. சங்கரன், உபதலைவர்: மு. காளமயில், செயலாளர்- மா. அப்பாவு, துணைச்செயலாளர் - முனியாண்டி, பொருளாளர்- ஒ. மருதை.மன்றத்தார்களால் அனுப்பப்படும் நன்கொடை வசூலிப்பவர்களிடம் இவ்வூர்த் தோழர்களும், அனுதாபிகளும்நன்கொடை அளிக்குமாறு வேண்டிக்கொள்ளப்பட்டது.

விவசாயிகள் சங்கம்

திருப்பத்தூர், மார்ச். 20—

திருப்பத்தூர் வ. ஆ. முத்தூர் மார்ச் 9 ஞாயிறு மாலை 7 மணிக்கு இவ்வூரில் திருப்பத்தூர் தாலுக்கா விவசாயிகள் சங்கச் சார்பில்தோழர் எம். எம். இரத்தினம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தலைவர் முகவுரைக்குப்பின் தோழர் டாக்டர் க நமுனிவர் ன் இராமகிருஷ்ணர்களின் வைத்ய வசதி குறைவைப்பற்றியும் தோழர் வடக்கப்பட்டு வி. என். தத்தப்பன் தற்கால அரசியலைப்பற்றியும், ஜமீன்தாரி ஒழிப்பில் நஷ்ட ஈடு சர்க்கார் தருவதைப்பற்றி கண்டித்தும் விவசாயிகளுக்கு வேண்டிய சாதனங்களை உடனடியாக சர்க்கார் பூர்த்தி செய்யாததைப்பற்றியும் மது இலக்கும் தொழிலால் பாதிக்கப்பட்ட மரமேறிகளுக்கு புறம்போக்கு நிலங்களை உரிமையாக்கப்பட வேண்டும் என்றும் தோழர் திருப்பத்தூர் செஞ்சோற் சமூகதாசத்தைப் பற்றியு', வடகா சே சுரண்டல் முறைப்பற்றியும், கிராமங்களுக்கு கல்வி அவசியத்தைப்பற்றியும்சொற்பொழிவாற்ற தோழர்தத்தப்பனுல் வந்தனோபசாரம் கூற கூட்டம் இரவு 9-30க்கு இனிது முடிந்தது. கூட்டத்தில் ஏராளமான ஆண் பெண்கள் கலந்து கொண்டனர்.

வங்கக் குழப்பத்திற்குக் காரணம்

சந்திரநாகூர் என சந்தேகம்

லண்டன், மார்ச். 31—

இந்தியாவில் மதப்பற்றற்ற சர்க்காரே நடைபெறுகிறதென்றும், மைனாரிட்டிகளின் உரிமைகள்பாதுகாக்கப்படும் என்றும் சொல்லப் பண்டித நேருவும், சர்தார் படேலும் கடந்திருக்கிறார்கள்என்று மாஞ்செஸ்டர் கார்டியன் பாராட்டி எழுதியிருக்கிறது.

அப்பத்திரிகை மேற்கொண்டு எழுதியிருப்பதாவது:—இந்தியாவின் கௌரவம் அந்தஸ்து உலகமெங்கும் பரவிவிட்டது. அந்தக் கௌரவத்திற்கு ஊறு ஏற்படாத வகையில்தான் அதன் தலைவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள்.

ஆனால் வங்க நிலைமை இன்னும் புகைந்துகொண்டே இருக்கிறது சந்திரநாகூரை விஷமிகள் தங்கள் தளமாகக் கொண்டு வேலை செய்வதால், இந்திய சர்க்காரின் அமைதியை நிலைநாட்டும் முயற்சி பலனளிக்காத வண்ணம் இருக்கின்றன.

எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் பிரான்ஸ். சந்திரநாகூரை இந்தியாவிடம் ஒப்படைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையேயாகும்.

பொழுதுபோக்கு

தமிழ்

பிராட்வே	—	விஜயலக்ஷ்மி
சரஸ்வதி	—	,,
செலிட்டி	—	,,
கிரௌன்	—	வேலைக்காரி
திருமகள் (சைதை)		வாழ்க்கை
மகாராணி	—	,,
[illegible]	—	,,
[illegible]		
சுவாலி	—	

தெலுங்கு

பிராட்வே	—	குணசுந்தரி
வெலிங்டன்	—	,,

ஆங்கிலம்

Casino	—	Bride for Sale
Minerva	—	The Fighting O'flynn
Midland	—	Canon City
New Globe	—	I was a Mele war Bride
New Elphinstone	—	Under Capricorn

ஹிந்தி

சாகர்	—	ராம் பான்
அசோக்	—	டாடா
ஸ்டார்	—	அனோகா பியார்
சவானி	—	1857
செலக்ட்	—	ஷப்னம்

சாதியில்லை

[என். இ. பாலகுரு]

பாடுபடப் பிறக்குமொரு சாதியில்லை!
பாடுபடா துண்ணுதற்கோர் சாதியில்லை!
கேடுகளைச் சுமக்கவொரு சாதியில்லை!
கீழ்மையிலே உழலவொரு சாதியில்லை!

வஞ்சகத்தைத் தாங்கவொரு சாதியில்லை!
வஞ்சித்து வாழவொரு சாதியில்லை!
பஞ்சணையில் தூங்கவொரு சாதியில்லை!
பட்டினியால் வாடவொரு சாதியில்லை!

அவனிதனை ஆளவொரு சாதியில்லை!
அவர்கடிமை செய்யவொரு சாதியில்லை!
அவனியிலே உயர்ந்தவொரு சாதியில்லை!
அன்னாரை வணங்கவொரு சாதியில்லை!

கல்விதனைக் கற்கவொரு சாதியில்லை!
கல்லாமல் தாழவொரு சாதியில்லை!
இல்லாமல் துவளவொரு சாதியில்லை!
இருந்துண்டு உயரவொரு சாதியில்லை!

கஞ்சியில்லை! கத்தியால் குத்தினன்!!

—(0)—

வறுமையால் குழந்தைகளைக் கொன்ற தகப்பன்!

மதுரை, மார்ச். 29—

"குடும்பவாழ்க்கை மிகவும் மோசமாகப் போய்விட்டது. என் குழந்தைக்கு வேலை கிடைக்கவில்லை. இந்த நிலையில் எனது வீட்டிலிருந்த நகைகளும் பாத்திரங்களும் தீர்ந்தவிட்டன. இந்த நிலையில் எனது குடும்பத்தை நடத்த ரொம்பவும் [illegible]

[illegible] பட்ட வழக்கில் சங்கையா என்பவர் வாக்குமூலம் தந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அனந்தநாராயண அய்யர் எதிரிக்கு ஜன்மதண்டனை விதித்தும், சர்க்கார் இத்தண்டனையை குறைக்கலாம் என்றும் கூறினர்.

வழக்கு விபரம்

சங்கையா சாத்தூர் தாலுகாவைச் சேர்ந்த போத்திரெட்டிப்பட்டியைச் சேர்ந்தவர். இவருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. சங்கையாவின் மனைவி சண்முகவடிவு இறந்துவிட்டாள். சங்கையா தனது தள்ளாத வயதில் தனதுகுழந்தைகளுடன் வசித்து வந்தார்.

தகப்பனுக்கு முதிய வயதில் வேலை செய்ய சகிக்காத மகன் தானே வேலை செய்து வந்து அதன்மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்திவந்தனர்.

ஒருநாள் தனது சகோதரர்கள் தூங்கும்போதுதான் எப்பொழுதும்போல் வேலைக்கு சென்ற வெள்ளைச்சாமி என்றழைக்கப்படும் மகன்.

இந்தவேலையில்லாவாழ்க்கையில் வெறுப்புக் கொண்ட தந்தை தனது இரண்டு குமாரர்களையும் கத்தியால் குத்திக்கொன்றுவிட்டு நேரே போலீஸில் சரணடைந்தார். (ந-தி)

வரவேற்க முடியாதாம்!

சிட்னி, மார்ச். 31—

கம்யூனிஸ்டு அபிமானமுள்ளவர் என்று கருதப்பட்ட டீன்டாபரி டீன் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். இவரை வரவேற்க வேண்டும் என்று சமாதான கவுன்சில் விரும்பியது. இவரை வரவேற்க முடியாது என்று மினர் மேன் மேயர் மறுத்துவிட்டார்.

மில் முதலாளிகள் மீது வழக்குதொடரப்பட்டது

மதுரை, மார்ச். 30—

மீனாட்சி மில் நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள தகரா[illegible] தொழிற் தகராறு [illegible] கோர்டின் மத்திய[illegible]

[illegible] குறைத்து[illegible] செய்தும் இருக்கின்றனர். எனவே இது தொழிற் சட்டம் 23-(பி) பிரிவை மீறிய செய்கையாகும்.

எனவே அவர்கள் ஆள் குறைப்பு, தொழில் நிபந்தனைகளை மாற்றியும் இருப்பதால் அவர்கள் மீது 31 (1) 26 (2) பிரிவுகளின்படி குற்றம் செய்துள்ளனர்.

ஆகவே, மீனாட்சி மில் நிர்வாகத்தின் மானேஜிங் டைரக்டர் தோழர் கருமுத்து தியாகராசன் செட்டியார் உட்பட ஆறுபேர்கள் மீது, ஜில்லா மாஜிஸ்திரேட் நகர் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஓர் புகார் தாக்கல் செய்துள்ளார். (இ. நி.)

குதிரைகள் இசையை அனுபவிகுகும்?

பிளுக்கு, மார்ச். 31—

ஜாஸ், வால்ட்ஸ் முதலிய ஆங்கில சங்கீதத்தைப் பற்றிக் குதிரைகள் எவ்வாறு நினைக்கின்றன என்பதைப் பரிசோதித்துப் பார்க்க பிளுக்டர்பினைப் அதிகாரிகள் உத்தேசித்திருக்கின்றனர்.

குதிரைப் பந்தய மைதானத்தருகே சங்கீத மேடை அமைத்துக்காட்டவேது என்றும், இதனால் குதிரைகளின் ஓய்வுக்குப் பாதகம் ஏற்படும் என்றும் 22 பந்தயக் குதிரை சொந்தக்காரர்கள் ஆட்சேபித்திருக்கின்றனர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1